நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

20 June 2015

2015

தரம் : தொடக்கநிலை (ஆண்டு 3, 4, 5)
Level : Basic (Year 3, 4 & 5)

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

For questions 1 to 7 choose the words that best describe the action shown in the picture.

**1 முதல் 7 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்யவும்.**



1. இந்தப் படத்தில் ______________ எருதுகள் நிற்கின்றன.

   a) ஒன்று

   b) இரண்டு

   c) நான்கு

   d) ஐந்து



2. அமலன் ______________________ நூல் கட்டுகிறான்.

   a) படத்திற்கு

   b) பட்டத்திற்கு

   c) சட்டத்திற்கு

   d) பெட்டிக்கு



3. கப்பல் ______________________ மிதந்து செல்கிறது.

   a) காற்றில்

   b) வானத்தில்

   c) நிலத்தில்

   d) கடலில்



4. அண்ணா கதைப்புத்தகம் ______________ .

a) வாசிக்கிறார்

b) எழுதுகிறார்

c) வரைகிறார்

d) விளையாடுகிறார்



5. புறா ______________ தண்ணீரில் போட்டது.

a) எறும்பை

b) இலையை

c) தடியை

d) தவளையை



6. பெரிய சிலந்தி ஒன்று ______________ பின்னுகின்றது.

a) தலை

b) ஓலை

c) வளை

d) வலை



7. இந்தப் படத்தில் ஒரு குடை ______________ வைக்கப்பட்டுள்ளது.

a) மடித்து

b) விரித்து

c) மாட்டி

d) மூடி

Read and understand the given poem and answer the questions 8 to 12.

**கீழே தரப்பட்ட பாடலை வாசித்து அதிலிருந்து 8 முதல் 12 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

வெள்ளைக் கொக்கு ஒன்று வந்து
மீனைக் கொத்திப் பார்த்தது
துள்ளித் துள்ளி மீனும் தப்பி
தூரப் பாய்ந்து போனது

எல்லையற்ற கோபத்தோடு
இன்னும் கொக்கு முயன்றது
கல்லில் துள்ளி விழுந்த மீனைக்
கௌவிக் கொண்டு பறந்தது.

8. இப்பாடலில் வந்த **பறவை** எது?

a) கொக்கு

b) மயில்

c) அன்னம்

d) காகம்

9. அப்பறவை **என்ன நிறம்** எனப் பாடலில் கூறப்படுகிறது?

a) கறுப்பு

b) சிவப்பு

c) வெள்ளை

d) பச்சை

10. பறவை **எதனைக்** கொத்திப் பார்த்தது?

a) மீனை

b) கல்லை

c) இறாலை

d) நண்டை

11. மீன் **எங்கே** துள்ளி விழுந்தது?

a) எல்லையில்

b) கடலில்

c) கல்லில்

d) கொக்கில்

12. மீன் **எவ்வாறு** தப்பிப் போனது?

a) பாய்ந்து

b) பறந்து

c) நடந்து

d) நடனமாடி

For questions 13 to 15 choose the word that **has the closest meaning** to the underlined word.

**13 முதல் 15 வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்திலுள்ள சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்யவும்.**

13. கபிலன் **தந்தையுடன்** கடைக்குச் சென்றான்.

a) அம்மாவுடன்

b) அப்பாவுடன்

c) அண்ணாவுடன்

d) அக்காவுடன்

14. பறவைகள் **இரையைத்** தேடிப் பறந்து சென்றன.

a) கூட்டைத்

b) குஞ்சைத்

c) உணவைத்

d) உடையைத்

15. மக்கள் தீபாவளி பண்டிகையைத் **தீபங்கள்** ஏற்றிக் கொண்டாடினர்.

a) விளக்குகள்

b) மலர்கள்

c) கோலங்கள்

d) இனிப்புப் பண்டங்கள்

For questions 16 to 18 give the **opposites** to the underlined words.

**16 முதல் 18 வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்திலுள்ள சொல்லிற்கு எதிர்க் கருத்துள்ள சொல்லை தெரிவு செய்யவும்.**

16. அவுஸ்திரேலியாவில் இவ்வருடம் மழை **கூடுதலாக** இருந்தது.

a) அதிகமாக

b) அழிவாக

c) குறைவாக

d) நிறைவாக

17. கவிதாவைக் கண்டதும் சாந்தி **மகிழ்ச்சி** அடைந்தாள்.

a) சந்தோசம்

b) வியப்பு

c) களிப்பு

d) துக்கம்

18. நிமலன் நீச்சல் போட்டியின் போது **உற்சாகமாகக்** காணப்பட்டான்.

a) சோர்வாக

b) மகிழ்ச்சியாக

c) சந்தோசமாக

d) சுறுசுறுப்பாக

Read the paragraph below and answer the questions 19 to 21 from the information given.

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து அதில் தரப்பட்ட தகவல்களைக் கொண்டு 19 முதல் 21 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

முற்காலத்திலே தமிழ்நாட்டில் பல புலவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுள் ஔவையார் என்ற தமிழ்ப் பெண் புலவரும் ஒருவர். ஔவையார் மிகுந்த கல்வி அறிவு மிக்கவர். அவர் நெல்லிக்கனியை உண்டு நீண்ட காலம் வாழ்ந்த மூதாட்டி ஆவார்.

அவர் சிறுவர்களிடம் அன்புள்ளம் கொண்டவர். அவர் அருமைத் தமிழை வளர்க்க ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை என்ற நீதி நூல்களை எழுதினார். அவரது நீதி நூல்கள் இன்றும் பலரால் போற்றப்படுகின்றன.

19. ஔவையார் புகழ் பெற்ற ஒரு தமிழ்

a) புலவர

b) ஓவியர்

c) ஆசிரியர்

d) வைத்தியர்

20. ஔவையார் இயற்றிய நீதி நூல்கள் எவை?

a) சிலப்பதிகாரம், திருக்குறள், இராமாயணம்

b) திருக்குறள், சிலப்பதிகாரம், பாரதம்

c) மூதுரை, நல்வழி, கொன்றை வேந்தன்

d) சிலப்பதிகாரம், இராமாயணம், பாரதம்

21. ஔவையார் எதனை உண்டு நீண்ட காலம் வாழ்ந்தார்?

a) தோடங்கனியை

b) மாங்கனியை

c) விளாங்கனியை

d) நெல்லிக்கனியை

For questions 22 to 24 choose the word with the correct spelling to complete the sentence.

**22 முதல் 24 வரையுள்ள வினாக்களுக்கு சரியான சொல்லைக் கொண்டு வசனத்தைப் பூர்த்தி செய்யவும்.**

22. நேற்று எமது பாடசாலையின் ____________________ நடைபெற்றது.

a) களைவிழா

b) கலைவிளா

c) கலைவிழா

d) கலைவிலா

23. இன்று காலையில் மாணவர்கள் ____________________ செல்ல ஆயத்தமானார்கள்.

a) சுற்ருலா

b) சுற்றுலா

c) சுற்துலா

d) சுற்றுளா

24. மின்னுவதெல்லாம் ________________ அல்ல.

a) பென்

b) பொன்

c) பேன்

d) போன்

Read the clues carefully to identify the words. Then write them in the appropriate grids.

**உதவிக் குறிப்புகளை கவனமாக வாசித்து சொற்களை கண்டுபிடிக்கவும். பின்னர் அவற்றை உரிய கட்டங்களில் எழுதவும்.**

25. தமிழ் மாதங்களில் ஒன்று (1 எழுத்துச் சொல்).

26. நிறங்களில் ஒன்று (2 எழுத்துகள் கொண்ட சொல்)

27. ஐம்பொறிகளில் ஒன்று (3 எழுத்துகள் கொண்ட சொல்)

28. குலை குலையாக காய்க்கும் பழம் ஒன்று (4 எழுத்துகள் கொண்ட சொல்)

29. அறுசுவைகளில் ஒன்று (5 எழுத்துகள் கொண்ட சொல்)

30. படம் பார்க்க உதவும் கருவியொன்று (6 எழுத்துகள் கொண்ட சொல்)



நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2015